1665

துமுறைத்தமிழ்

~~நான்காம்~~ இரண்டாம் பாடம்



28 MAR 1940
MADRAS

புதுமுறைத் தமிழ்

இரண்டாம் பாடம்

(இரண்டாம் வகுப்பு)

[1939-ம் வருடத்துப் புதிய பாடத் திட்டத்தை அனுசரித்துப் புதிப்பிக்கப்பட்டது.]

சென்னை, கவர்ன்மெண்ட் டிரெயினிங் ஸ்கூல், (மாடல் ஸ்கூல்)
உபாத்தியாயர், (ரிடையர்ட்)

ஆர். நாராயணஸ்வாமி அய்யர்

இயற்றியது.

காமாக்ஷி புத்தகசாலை

மாயவரம்

ரிஜிஸ்டர் செய்தது] 1939 [விலை $3\frac{1}{2}$ அணா

First Published	...	1928
Reprinted	...	1931
Reprinted	...	1934
Revised in Nov.	...	1936
Reprinted	...	1938
Reprinted	...	1939

[Revised according to 1939 syllabus
& printed in November 1939]

The Jupiter Press, Madras.

முகவுரை

புதுமுறைத் தமிழ்ப் பாடம் என்னும் பெயருடன் விளங்கும் இப் புத்தக வரிசை, புதிய பாடத் திட்டத்தை மேற்கொண்டு அமைக்கப்பெற்றுள்ளது. இது, சிறுவர் சிறுமியர்தம் அறிவின் வளர்ச்சிக்கு ஏற்றபடி, அன்னோர் தமிழ் மொழியைப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் விரைவிற் பழகுமாறு, தக்க முறையில் தொகுக்கப்பட் டிருக்கிறது.

குழந்தைகளுக்கு வீட்டிலும் வெளியிலும் பழக்கமுள்ள சில விளையாட்டுப் பொருள்களையும், பழம் முதலிய தின்பண்டங்களை யும், மற்றும் சில பொருள்களையும் ஆசிரியர் நேரில் காட்டி, அவற் றின் பெயர்களைச் சொல்லப் பழக்க வேண்டும். பொருள்களை நேரில் காட்ட இயலாத விடத்துப் படங்கள் மூலம் அப்பொருள்களின் பெயர்களைச் சொல்லச் செய்து, பின் அச் சொற்களைத் திருத்த மாக உச்சரிக்கவும் எழுதவும் கற்பிக்க வேண்டும். இம்முறையைப் பின்பற்றி, ஏற்ற இடங்களில் வர்ணத்துடன் விளங்கும் பலவிதச் சித்திரப் படங்களைக்கொண்டு முதற்பாடப் புத்தகம் அமைந்திருப் பது நோக்கத் தக்கது.

இரண்டாவது மூன்றாவது பாடப் புத்தகங்களில், படங்களி லிருந்தே சிறு வாக்கியங்களையும், கதைகளையும், சிறுவர்கள் தாமே அறிந்து சொல்லுமாறு, பல தொடர் கதைப் படங்களும் தனிக் கதைப் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மேலும், அவற்றில் படித்த விஷயங்களில் பயிற்சி யேற்படப் பல வினாக்களும், அவற் றிற்கு விடை யளிக்கும் மாதிரிகளும், இலக்கணப் பயிற்சிகளும், ஆங்காங்கு அமைந்துள்ளன.

நான்காவது ஐந்தாவது வகுப்புப் புத்தகங்களில், அவ்வவ் வகுப்புக்களுக் கேற்றவாறு, பாலர்களின் பொது அறிவை விருத்தி செய்யும் முறையில், சுகாதாரம், விவசாயம், கைத்தொழில், நீதிக் கதைகள் முதலிய பாடங்களைத் தொகுத்து, அவைகளுக்கு ஏற்ற பல வகைப் பயிற்சிகளும் சேர்க்கப்பெற்றுள்ளன.

பொதுவாக நோக்குமிடத்து, இப் பாடப் புத்தகங்களைப் படிக்கும் மாணவர்கள், தமிழ் மொழியில் திருத்தமாகப் பேசவும் எழுதவும் பழகுவதுடன், அன்னோர் பொதுவான உலகியல் அறிவையும் பெறுவர் என்பது திண்ணம்.

இப் பாடப் புத்தகங்கள் நம் நாட்டுச் சிறுவர் சிறுமியரது அபி விருத்திக்கு ஏற்ற முறையில் அமைந்துள்ளன வாதலின், இவற்றை அறிவாளிகள் அன்புடன் ஏற்று, எம்மை ஆதரிக்கும்படி வேண்டு கின்றோம்.

ஆசிரியர்.

பொருள் அடக்கம்

எண்	விஷயம்	பக்கம்
1.	ஸரஸ்வதி	11
2.	நல்ல பையன்	12
3.	கிணறு	13
4.	அனுமார்	14
5.	சிறுவனும் பூனைக்குட்டியும்	15
6.	வீட்டு மிருகங்கள்	16
7.	காட்டு மிருகங்கள்	17
8.	பறவைகள்	18
9.	செக்கு	20
10.	விடியற்காலம்	22
11.	எண்ணெய் வகைகள்	23
12.	நிலாப் பாட்டு	25
13.	ஆலமரம்	26
14.	செட்டியாரின் தந்திரம்	28
15.	கூடை முடைதல்	30
16.	புஷ்பங்கள்	32
17.	பலவகை வண்டிகள்	34
18.	கூடி வாழ்தல்	36
19.	வைத்திய சாலை	38
20.	சுத்தம்	40
21.	பட்டாஸ் கடை	41
22.	பொங்கல் பண்டிகை	44
23.	நாற்காலி ஆட்டம் (முதற் பாகம்)	46
24.	பூனையும் குருவியும்	49
25.	பாம்புகள்	50
26.	கடற்கரை	52
27.	கடவுள்	54
28.	துயில் பாட்டு	56
29.	திருப்பதி மலை	57
30.	நாற்காலி ஆட்டம் (இரண்டாம் பாகம்)	62
	பழமொழிகள்	61
	உலகநீதி	64

படங்களைப் பார்த்து அவற்றின் பெயர்களைச் சொல்லவும்
எழுதவும் செய்தல்



28 MAR 1940
MADRAS

படங்களில் உள்ள தொழிலாளர்களின் பெயர்களைச்
சொல்லவும் எழுதவும் செய்தல்.

28 MAR 1940
MADRAS

பயிற்சி



ஒரு கோழி



இரண்டு கோழிகள்



ஒரு கண்



இரண்டு கண்கள்



ஒரு பென்ஸில்



இரண்டு ———



ஒரு நாற்காலி



இரண்டு ———

பயிற்சி

இவன் ஒரு பையன்.

அவள் ஒரு ——.

இவர்கள் ஓடுகிறார்கள்.



அவர்கள் ——.



இது ஒரு பசு.



அது ஒரு ——.

பயிற்சி



இவை பறவைகள்.

அவை மிருகங்கள்.





இங்கே ஒரு வீடு

அங்கே ஒரு குடிசை





இதோ ஒரு ——

அதோ ஒரு ——





பொங்கல் பானை

கூனல் முதுகு



தென்னை மரம்



மர உரல்



கோயில் மணி



குதிரை லாடம்

குறிப்பு:—பொருள் அல்லது படத்தைக் காட்டிச் சொற்களைச் சொல்லவும் எழுதவும் செய்தல்.

ஊசி நூல்	மண் தோண்டி
சம்பா நெல்	பெட்டைக் கோழி
வாழைக் குலை	சிவப்புப் பசு
மாம் பிஞ்சு	பித்தளைப் பூட்டு
விறகுக் கட்டு	பாக்குத் தூள்
பக்ஷிக் கூடு	கத்தரிப் பிஞ்சு
யானைக் குட்டி	கீரிப் பிள்ளை
ஆலம் விழுது	இருப்புப் பாதை
உளுத்தம் பருப்பு	ஆட்டுப் பால்
ஊஞ்சல் ஆட்டம்	அடுப்புக் கரி

பயிற்சி

கோடிட்ட இடங்களில் சரியான சொற்களைச் சொல்லு:

1. ஊசி ——
2. —— உரல்
3. பொங்கல் ——
4. —— ஆட்டம்
5. பெட்டைக் ——
6. மண் ——
7. கத்தரிப் ——
8. —— விழுது

நேற்று	இன்று	நாளை
போன வருஷம்	இந்த வருஷம்	அடுத்த வருஷம்

என் தம்பி நேற்று வந்தான்.

அம்மா இன்று வருகிருள்.

அப்பா நாளைக்கு வருவார்.

நீ போன வருஷம் எந்த வகுப்பில் படித்தாய்? நான் போன வருஷம் முதல் வகுப்பில் படித்தேன்.

நீ இந்த வருஷம் எந்த வகுப்பில் படிக்கிருய்? நான் இந்த வருஷம் இரண் டாவது வகுப்பில் படிக்கிறேன்.

நீ அடுத்த வருஷம் எதில் படிப் பாய்? நான் அடுத்த வருஷம் மூன்ரு வது வகுப்பில் படிப்பேன்.

பயிற்சி

கோடிட்ட இடங்களில் சரியான சொற்களைச் சொல்லு:

1. நான் இந்த வருஷம் இரண்டாவது வகுப்பில் ———.
2. நான் அடுத்த வருஷம் ——— வகுப்பில் படிப்பேன்.
3. நான் போன வருஷம் ——— வகுப்பில் ———.



1. ஸரஸ்வதி

கல்வி	வசிக்கிருள்	ஆடை
தெய்வம்	வெண்தாமரை	வீணை

ஸரஸ்வதி கல்வியின் தெய்வம்.

அவள் வெண்தாமரையில் வசிக்கிருள்.

அவள் ஆடை வெண்மையானது.

ஸரஸ்வதி வீணை வாசிக்கிருள்.

அவளை வணங்கினுல் கல்வி வளரும்.

படத்தைப் பார்த்துச் சொல்லு:

1. ஸரஸ்வதியின் அருகில் என்ன இருக்கிறது?
2. அவள், தன் கைகளில் என்ன வைத்திருக்கிருள்?

2. நல்ல பையன்



பள்ளிக்கூடம்

உபாத்தியாயர்

சொற்படி

சரியாய்

மாலை நேரம்

விளையாடுவான்

கந்தன் நல்ல பையன்.
இவன் தினம் பள்ளிக்கூடம் போவான்;
உபாத்தியாயர் சொற்படி கேட்பான்;
பாடங்களைச் சரியாய்ப் படிப்பான்;
மாலை நேரத்தில் விளையாடுவான்.
கந்தனைப் போலவே நீயும் இரு.

படத்தைப் பார்த்துச் சொல்லு:

1. கந்தன் போட்டுக் கொண்டிருக்கும் உடைகள் என்ன?
2. அவன் கைகளில் இருப்பவை என்ன?



3. கிணறு

ஆழமாக கைப்பிடி சுவர் சுத்தமானது இராட்டினம்

இது ஒரு கிணறு.
கிணறு ஆழமாக இருக்கும்.
கிணற்று நீர் சுத்தமானது.
கிணற்றைச் சுற்றி இருப்பது என்ன ?
அது ஒரு கைப்பிடி சுவர்.
மேலே இருப்பது ஒரு இராட்டினம்.

படத்தைப் பார்த்துச் சொல்லு :

1. கைப்பிடி சுவர் எங்கே இருக்கிறது ?
2. அதன் அருகில் இருக்கிறவள் என்ன செய்கிறாள் ?
3. அவள் பக்கத்தில் இருப்பது என்ன ?

4. அனுமார்

வீரர்
கடல்
தாண்டினர்
இலங்கை
சென்றார்
துஷ்டர்கள்
நகரை
எரித்தார்

அனுமார் ஒரு பெரிய வீரர்.
அவர் கடலைத் தாண்டினர்;
இலங்கைக்குச் சென்றார்;
அங்கே சிதையைக் கண்டார்;
அனேக துஷ்டர்களைக் கொன்றார்;
அந்நகரைச் சுட்டு எரித்தார்;
திரும்பி இராமரிடம் சென்றார்.

பயிற்சி

கோடிட்ட இடங்களில் சரியான சொற்களை எழுது:

1. அனுமார் ஒரு பெரிய —— .
2. அவர் இலங்கையில் —— கண்டார்.
3. திரும்பி —— சென்றார்.



5. சிறுவனும் பூனைக் குட்டியும்

1. சீறும் பூனைக்
   குட்டியே இங்கு —விளையாடச்
   சீராய் நாடி
   நேராய் ஓடி —வா வா வா

2. பாலும் சோறும்
   பழமும் எல்லாம் —தருவேனே
   பாராய் என்னை
   வாராய் இங்கே —விளையாட

3. துள்ளிக் குதித்துத்
   துடுக்காய் எங்கும் —ஓடாதே
   மெள்ள நடந்து
   மெதுவாய் அருகில் —வருவாயே.

6. வீட்டு மிருகங்கள்

காளைமாடு	சவாரி	மோப்பத்தினுல்
ஏர் உழ	பிராணி	வேகமாய்



எருது வண்டி இழுக்கும். அது ஏர் உழ உதவும். எருதுக்குக் காளை மாடு என்று பெயர்.



குதிரை சவாரி செய்ய உதவும். அதை வண்டியில் கட்டி ஓட்டலாம். அது வேகமாய் ஓடும்.



நாய் அறிவுள்ள பிராணி. அது வீடு காக்கும்; மோப்பத்தினுல் பொருள்களை அறியும்.

கேள்விகள்

1. எந்தெந்த மிருகங்கள் வண்டி இழுக்க உதவும்?
2. நாய் பொருள்களை எப்படி அறியும்?

பயிற்சி

குலைக்கும், கதறும், கத்தும், கனைக்கும் :—இச்சொற்கள் ஒவ்வொன்றையும் தகுந்த இடத்தில் எழுது :

காளை மாடு ——. குதிரை——. நாய் ——. பூனை ——.

7. காட்டு மிருகங்கள்

காட்டில்	பாகன்	கொடிய	வலிமை
வசிக்கும்	தந்தம்	மிருகங்கள்	பிடரிமயிர்



யானை ஒரு பெரிய மிருகம்; அது காட்டில் வசிக்கும். அது பாகன் சொற்படி கேட்கும். ஆண் யானைக்குத் தந்தம் உண்டு.



புலி ஒரு கொடிய மிருகம். அதன் உடம்பில் பட்டையான கோடுகள் இருக்கும். அது பசு முதலிய மிருகங்களைக் கொன்று தின்னும்.



சிங்கம் மிருகங்களுக்கு அரசன். அதற்குப் பிடரிமயிர் உண்டு. அது மிகவும் வலிமை உள்ளது. அதனிடம் பல நல்ல குணங்கள் இருக்கின்றன.

கேள்விகள்

1. யானை எங்கு வசிக்கும்?
2. தந்தம் எதற்கு உண்டு?
3. எதற்குப் பிடரிமயிர் உண்டு?

8. பறவைகள்

அதிகாலை	இடையில்	பசுமை	தோகை
தரை	மெல்லிய	கூட்டில்	கோத்தி
ஒட்டாது	சவ்வு	வளர்க்கிறார்கள்	கரிய

கோழி அதிகாலையில் கூவும். அது அதிக உயரம் பறக்காது. ஆண் கோழிக்குச் சேவல் என்று பெயர். கோழியைச் சிலர் வளர்க்கிறார்கள்.



வாத்து தரையிலும் தண்ணீரிலும் வசிக்கும். அதன் உடம்பில் நீர் ஒட்டாது. அதன் விரல்களின் இடையில் மெல்லிய தோல் இருக்கிறது. அதற்குச் சவ்வு என்று பெயர். அத்தோலின் உதவியால் வாத்து நீரில் சுலபமாய் நீந்தும்.



பச்சைக் கிளி அழகுள்ளது. அதன் மூக்கு சிவப்பாயும், உடல் பசுமையாயும் இருக்கும். கிளியைச் சிலர் கூட்டில் வைத்து வளர்க்கிறார்கள். அது சொல்லிக் கொடுத்ததைச் சொல்லும்.



மயில் ஓர் அழகான பறவை. ஆண் மயிலுக்குத் தோகை உண்டு. அது கரிய மேகத்தைக் கண்டால் தோகையை விரித்து ஆடும். மயில் பாம்பைக் கொத்திக் கொல்லும்.

காகம் ஒரு கரிய பறவை. அது அதிகாலையில் கூவும். அது, உணவைத் தன் கூட்டத்தோடு சேர்ந்து தின்னும்.



கேள்விகள்

1. எதற்குச் சேவல் என்று பெயர்?
2. வாத்து எங்கே வசிக்கும்?
3. சவ்வு என்பது என்ன?
4. கிளியின் குணம் என்ன?
5. எந்தப் பறவைக்குத் தோகை உண்டு?
6. அது எப்பொழுது தன் தோகையை விரித்து ஆடும்?

பயிற்சி

மாதிரி:—காகம் **கா கா** என்று கத்தும்.

கோழி ——— என்று கத்தும்.

வாத்து ——— என்று கூவும்.

கிளி ——— என்று கத்தும்.



9. செக்கு

உரல்	நசுங்கும்	மண்குடம்	கடப்பாரை
உலக்கை	எண்ணெய்	மோண்டு	ஓட்டுகிறுன்
கோடியில்	வாணியன்	ஊற்றுவான்	கிளறுகிறுன்
சாட்டைக்கோல்	கோட்டாங்கச்சி	தேங்காய்ப்பருப்பு	

இது ஒரு செக்கின் படம். செக்கு ஒரு பெரிய உரலைப்போல் இருக்கும். அதன் நடுவில் இருப்பது ஒரு மர உலக்கை. அது, அந்தச் செக்கின் அடிப் பக்கத்தில் உள்ள ஒரு நீண்ட மரக் கட்டையுடன் சேர்க்கப்பட்டு இருக்கிறது. அக்கட்டையின் கோடியில்

இரண்டு எருதுகள் பூட்டப்பட்டு இருக்கின்றன. அவைகளை ஒரு சிறுவன் சாட்டைக் கோலினால் ஓட்டுகிறான். அவை செக்கைச் சுற்றி வருகின்றன. அப்போது செக்கிற்குள் இருக்கும் உலக்கையும் கூடச் சுற்றும். அது சுற்றும்போது செக்கிற்குள் இருக்கும் எள் நன்றாய் நசுங்கும். அதிலிருந்து எண்ணெய் வெளிப்படும்.

ஒரு மனிதன் செக்கின் பக்கத்தில் நிற்கிறான் பார். அவன் வாணியன். அவன் தன் கையில் ஒரு கடப்பாரை வைத்திருக்கிறான். அதனால் அவன் செக்கில் இருக்கும் எள்ளைக் கிளறுகிறான்.

செக்கின் அடி மரத்தில் ஒரு மண் குடம் இருக்கிறது. அதன் பக்கத்தில் ஒரு கொட்டாங்கச்சியும் இருக்கிறது. வாணியன் அந்தக் கொட்டாங்கச்சியால் எண்ணெயை மண்குடத்தில் மொண்டு ஊற்றுவான்.

அவன் ஒரு கூடையில் தேங்காய்ப் பருப்புக்கள் வைத்திருக்கிறான்; அவைகளையும் பிறகு செக்கில் இட்டு ஆட்டப் போகிறான்.

கேள்விகள்

1. செக்கிற்குள் இருக்கும் உலக்கை சுற்றக் காரணம் என்ன?
2. படத்தில் வாணியன் என்ன செய்கிறான்?
3. செக்கின் அடிமரத்தில் இருப்பவை எவை?
4. கூடையில் இருப்பது என்ன?
5. அது எதற்காக அங்கு இருக்கிறது?

பயிற்சி

இப்பொருள்கள் என்ன செய்ய உதவும்?

மாதிரி:—கடப்பாரை குழி தோண்ட உதவும்.

கோடாலி——. அரிவாள்——. மண் வெட்டி——.



10. விடியற்காலம்

சூரியன்	உதிப்பதற்கு	இன்பத்தை	ஏற்ற
கத்த	பெரியோர்கள்	அரும்புகள்	கடைவதற்கு
முந்திய	துதிப்பார்கள்	தெளிவாக	லக்ஷ்மி

சூரியன் உதிப்பதற்குக் கொஞ்சம் முந்திய காலம் விடியற்காலம் எனப்படும். அப்பொழுது கோழி, காகம், குருவி முதலிய பறவைகள் கத்த ஆரம்பிக்கும்.

பெரியோர்கள் விடியற்காலத்தில் எழுந்து கடவுளைத் துதிப்பார்கள். அந்தக் காலம் எல்லோர்க்கும் இன்பத்தைக் கொடுக்கும். அப்போது புத்தி தெளிவாக இருக்கும். பிள்ளைகள் தங்கள் பாடங்களைப் படிப்பதற்கு ஏற்ற காலம் அதுவே.

செடி கொடிகளில் உள்ள அரும்புகள் விடியற்காலத்தில்தான் மலர ஆரம்பிக்கும். தயிர் கடைவதற்குத் தக்க காலம் அதுவே. விடியற் காலையில் எழுந்திருப்பவனை லக்ஷ்மி அடைவாள்.

பயிற்சி

கோடிட்ட இடங்களில் சரியான சொற்களை எழுது:

மாதிரி:—விடியற்காலத்தில் பறவைகள் **கத்தும்.** அக்காலத்தில் பிள்ளைகள் ———; அரும்புகள் ———.

11. எண்ணெய் வகைகள்

சமையல்	சுகம்	பசை	கிரோஸின் ஆயில்
பலகாரம்	மருந்து	எரு	மெழுகுவர்த்தி
சவுக்காரம்	கசப்பு	தீனி	பிண்ணுக்கு

எள்ளிலிருந்து உண்டாகும் எண்ணெய் நல்லெண்ணெய் எனப்படும். நல்லெண்ணெயை நாம் தேய்த்துக் கொள்ளுகிறோம். அந்த எண்ணெயினால் பலகாரங்களும் செய்யலாம்.

தேங்காயிலிருந்து எடுப்பது தேங்காய் எண்ணெய். அதனால் சவுக்காரமும் மெழுகுவர்த்தியும் செய்கிறார்கள். தேங்காய் எண்ணெய் சமையலுக்கும் பலகாரங்கள் செய்வதற்கும் உதவும்.

ஆமணக்கு விதையிலிருந்தும் எண்ணெய் எடுக்கலாம். அந்த எண்ணெயை உபயோகித்தால் உடம்புக்குச் சுகம் உண்டாகும்.

இலுப்பைப் பருப்பிலிருந்தும் எண்ணெய் எடுப்பார்கள். அந்த எண்ணெய் விளக்கு எரிக்க உதவும். அதன் பிண்ணுக்கு எண்ணெய்ப் பசையை நீக்கும்.

வேப்பங் கொட்டையிலிருந்தும் எண்ணெய் எடுப்பது உண்டு. அது சில மருந்துகளுக்கு உபயோகப்படுகிறது. அது மிகவும் கசப்பாய் இருக்கும்.

வேர்க்கடலையிலிருந்தும் எண்ணெய் எடுக்கிறார்கள். அந்த எண்ணெய்க்குக் கடலை எண்ணெய் என்று பெயர். வேர்க்கடலையை மணிலாக் கொட்டை என்றும் சொல்வது உண்டு. கடலை எண்ணெயைக் கொண்டும் விளக்கு எரிக்கலாம். அதன் பிண்ணாக்கு நிலத்திற்கு எருவாகும். எள், தேங்காய், வேர்க்கடலை இவைகளின் பிண்ணாக்கு மாடுகளுக்கு நல்ல தீனி ஆகும்.

மண்ணெண்ணெய் பூமியிலிருந்து எடுக்கப்படுகிறது. இதைக் 'கிரோஸின் ஆயில்' என்று சொல்வார்கள். விளக்கு எரிப்பதற்கு இது உதவுகிறது.

கேள்விகள்

1. தேங்காய் எண்ணெயினால் என்னென்ன செய்யலாம்?
2. எண்ணெய்ப் பசையை நீக்குவது எது?
3. வேர்க்கடலைக்கு வேறு பெயர் என்ன?
4. விளக்கு எரிக்க உதவும் எண்ணெய்கள் எவை?

பயிற்சி

இப்பொருள்கள் என்ன சுவை யுடையவை?

மாதிரி:—வேப்பெண்ணெய் கசக்கும்.

கடல் நீர் ———. லட்டு ———. மிளகு ———.

12. நிலாப் பாட்டு

அம்புலி	சுந்தரன்	தவழ்ந்து
வெண்மதி	தண்ணிலவு	வேண்டுகின்ருன்

அம்புலியே அம்புலியே ஆட வாராய்.
அழைக்கின்ருன் குழந்தையுடன் ஆட வாராய்.
சந்திரனே சுந்தரனே ஆட வாராய்.
தவழ்ந்துஇவ ளேடு நீயும் ஆட வாராய்.

வெண்மதியே வெண்மதியே ஆட வாராய்.
வேண்டுகின்ருன் குழந்தையுடன் ஆட வாராய்.
தண்ணிலவை வீசிவிளை யாட வாராய்.
தம்பிஇவ ளேடு நீயும் ஆட வாராய்.



13. ஆலமரம்

அடி	வேர் ஊன்றும்	பிரயாணிகள்
அகன்று	பருத்து	உறுதி
படர்ந்து	தூண்கள்	தண்டுகள்
விழுதுகள்	சாலை ஓரம்	வாகனங்கள்

மரங்களுக்குள் ஆலமரம் மிகப் பெரியது. ஆல மரத்தின் அடி அகன்று, மேலே கிளைகள் படர்ந்து இருக்கும். ஆலமரத்தின் விழுதுகளைப் பாருங்கள். அவை கயிறுபோல் தொங்குகின்றன. அவை பூமியில் இறங்கி வேர் ஊன்றும். பின் அவை பருத்துத் தூண் கள்போல் கிளைகளைத் தாங்கும்.

சாலை ஓரங்களில் ஆலமரங்களை வைத்து வளர்ப்பது உண்டு. அவை பிரயாணிகளுக்கு நல்ல நிழலைக் கொடுக்கும்.

ஆலமரத்தின் நிழலில் பலர் தங்கலாம். ஆல் இலைகளைத் தைத்து, அவற்றில் சாப்பிடுவது உண்டு. ஆலின் இளம் விழுதுகள் பல் தேய்க்க உதவும். அவை பற்களுக்கு மிக்க உறுதியைக் கொடுக்கும்.

பெரிய ஆலம் விழுதுகளால் தண்டுகள் செய்யலாம். அவை பெரிய வாகனங்கள் தூக்க உபயோகப் படுகின்றன. ஆலம்பழம் காக்கை முதலிய பறவைகளுக்கு உணவாகும்.

கேள்விகள்

1. ஆலமரங்களைச் சாலைகளில் வைத்து வளர்ப்பது ஏன்?
2. ஆல் இலை, இளம் விழுது — இவைகளின் உபயோகங்கள் என்ன?
3. பெரிய ஆலம் விழுதுகளைக்கொண்டு என்ன செய்யலாம்?
4. அவை எதற்கு உதவும்?

பயிற்சி

கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களைச் சொல்லு :

1. மரங்களுக்குள் —— மிகப் பெரியது.
2. இளம் விழுதுகள் —— —— உதவும்.
3. ஆலம் பழம் —— முதலிய பறவைகளுக்கு ——.



14. செட்டியாரின் தந்திரம்

பணக்காரர்	பாசாங்கு	ஒப்புவித்தனர்	மந்திரிப்பான்
பரண்	கடுக்கிறது	தந்திரத்தால்	யுக்தி

ஓர் ஊரில் ஒரு செட்டியார் இருந்தார். அவர் ஒரு பெரிய பணக்காரர். ஒருநாள் இரவு அவர் வீட்டுக்கு ஒரு திருடன் வந்தான். திருடன் பரண்மீது ஏறி ஒளிந்து கொண்டிருந்தான். திருடன் அங்கு ஒளிந்திருப்பதைச் செட்டியார் அறிந்துகொண்டார். அவர் ஒரு தந்திரத் தால் அவனைப் பிடிக்க எண்ணினார்.

செட்டியார், தம் கையில் ஒரு தேள் கொட்டி விட்ட தாகப் பாசாங்கு செய்தார். அவர் தம் மனைவியைக் கூப் பிட்டு, "ஐயோ ! என் கையில் தேள் கொட்டி விட்டது ;

மிகவும் கடுக்கிறது ; தாங்க முடியவில்லை ; அடுத்த வீட்டு இராமனைக் கூப்பிடு ; அவன் மந்திரிப்பான்" என்றார்.

அவர் மனைவியும் அடுத்த வீட்டுக்குப் போய் இராமனைக் கூப்பிட்டு வந்தாள். இராமன் தேள் கொட்டிய கையில் மந்திரித்தான். சற்று நேரத்துக்கெல்லாம் அவன் செட்டியாரைப் பார்த்து, "இப்பொழுது விஷம் இறங்கி விட்டதா?" என்று கேட்டான்.

செட்டியார், "விஷம் ஒருவாறு இறங்கி விட்டது. ஆனால் இந்தப் பரணில் இருக்கும் பெரியவர் மட்டும் இன்னும் இறங்கவில்லை" என்றார். இராமனும் செட்டியார் மனைவியும், இது திருடனைப் பிடிக்கச் செட்டியார் செய்த தந்திரம்" என்று அறிந்தனர்.

பிறகு அவர்கள் அந்தத் திருடனைப் பிடித்துப் போலீஸ்காரரிடம் ஒப்புவித்தனர். எல்லோரும் செட்டியாரின் யுக்தியைப் புகழ்ந்தார்கள்.

கேள்விகள்

1. திருடன் செட்டியார் வீட்டில் எங்கு ஒளிந்துகொண்டான்?
2. அவனைப் பிடிக்கச் செட்டியார் செய்த தந்திரம் என்ன ?
3. செட்டியார் இராமனிடம் என்ன சொன்னார் ?

பயிற்சி

கொடுத்திருக்கிற மாதிரி செய் :

செட்டியார்	...	செட்டியாரை
திருடன்	...	———
விஷம்	...	———
தேள்	...	———



15. கூடை முடைதல்

குறவன்	கூடை	மேற்கூடுகள்	கோரைகள்
மனைவி	முடைந்து	சுறுசுறுப்பு	பனைஓலை
சிம்புகள்	தட்டிகள்	சுலபமான	கைத்தொழில்

இப்படத்தில் ஒரு குறவனும் அவன் மனைவி மக்களும் கூடை முடைகிறார்கள். குறவன் பெரிய மூங்கிலை வெட்டி வந்து சிறு சிம்புகளாகக் கிழிக்கிறான். அவன் மனைவி கூடை பின்னுவதற்கு அடிப் பாகத்தை முடைந்து கொடுக்கிறாள். சிறுவர்கள் அச் சிம்புகளை முடைந்து கூடையாகச் செய்கிறார்கள்.

குறவர்கள் மிகவும் சுறுசுறுப்பு உள்ளவர்கள். அவர்கள் எல்லாரும் சேர்ந்து ஒரு நாளில் பல

கூடைகள் முடைவார்கள்; பிறகு அவற்றை விற்று லாபம் அடைவார்கள்.

மூங்கில் சிம்புகளைக் கொண்டு பாய்கள் பின்னுவதும் உண்டு. இப்பாய்களைத் தட்டிகளாகவும் மாட்டு வண்டிகளின் மேற்கூடுகளாகவும் உபயோகிக்கலாம்.

ஈச்சம் சிம்புகளாலும், கோரைகளாலும், பிரம்புகளாலும் கூடைகள் முடையலாம். இக்கூடைகள் பல காரியங்களுக்கு உபயோகப்படுகின்றன. பிரப்பங் கூடைகள் அழகாகவும் கெட்டியாகவும் இருக்கும். அவை அதிக விலை உள்ளவை. பனை ஓலைகளாலும் கூடைகள் முடைவது உண்டு.

கூடை முடைதல் ஒரு சுலபமான கைத்தொழில். அதை எவரும் எளிதில் கற்றுக்கொள்ளலாம். கைத்தொழில்கள் பிழைப்புக்குச் சிறந்த வழியாகும்.

கேள்விகள்

1. இப்படத்தில் யார் யார் இருக்கிறார்கள்?
2. குறவன் மனைவி என்ன செய்கிறாள்?
3. மூங்கில் சிம்புகளால் என்னென்ன செய்யலாம்?
4. எவைகளால் கூடைகள் முடையலாம்?

பயிற்சி

கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை எழுது:

மாதிரி:—குறவன் கூடை முடைகிறான்.

1. வண்ணான் துணிகளை ——.
2. குயவன் —— செய்கிறான்.
3. உழவன் —— ——.



16. புஷ்பங்கள்

வாசனே	அல்லி	மகிழம்பூ	வெண்மை
பூக்கும்	சுவாமி	மஞ்சள்	சாத்துவார்கள்
மலர்கள்	மணம்	மங்கலான	ஆண்மக்கள்
தாமரை	தாழம்பூ	மாலே	பெண்மக்கள்

சாதாரணமாய்ப் புஷ்பங்களுக்கு வாசனே உண்டு. சில புஷ்பங்களுக்கு வாசனே இல்லே. சில புஷ்பங்கள் கொடியில் பூக்கும். சில மலர்கள் செடியிலும் மரத்திலும் உண்டாகும்.

தாமரை அல்லி முதலியவை கொடிகளில் பூக்கும் புஷ்பங்கள். இவை நீரில் வளரும். தாமரையில் செந் தாமரை வெண்தாமரை என இரண்டு வகைகள் உண்டு.

மல்லிகை முல்லை இவைகளும் கொடியில் தோன்றும் புஷ்பங்கள். இவை வெண்மை நிறம் உள்ளவை; மிகுந்த மணமும் உடையவை. இக்கொடிகள் நிலத்தில் வளரும்.

ரோஜாப் பூக்கள் செடியிலிருந்து உண்டாகின்றன. இவை மிக அழகாய் இருக்கும். இவைகளுக்கு மணமும் அதிகம்.

தாழம்பூவும் மகிழம்பூவும் மரத்தில் உண்டாகும் மலர்கள். தாழம்பூ மஞ்சள் நிறமுடையது; சில தாழம் பூக்கள் வெண்மையாய் இருக்கும். மகிழம்பூ மங்கலான வெண்மை நிறம் உள்ளது. உலர உலர அதற்கு மணம் அதிகம்.

மல்லிகை ரோஜா முதலிய மலர்களை மாலையாகக் கட்டிச் சுவாமிக்குச் சாத்துவார்கள்; ஆண்மக்களும் பெண்மக்களும் அவற்றைச் சூட்டிக்கொள்வார்கள்.

கேள்விகள்

1. கொடியில் பூக்கும் புஷ்பங்கள் எவை?
2. மரத்தில் உண்டாகும் மலர்கள் எவை?
3. சிவப்பு நிறமுள்ள புஷ்பங்கள் எவை?
4. ரோஜாப்பூ எதிலிருந்து உண்டாகிறது?

பயிற்சி

எந்தப் பொருள் எந்த நிறமுடையது? பொருத்திச் சொல்.

மாதிரி:—மல்லிகைப்பூ வெண்மை நிறம்.

நிறம்		பொருள்
வெள்ளை	...	வெற்றிலை
மஞ்சள்	...	ரோஜா
சிவப்பு	...	தாமரை
பச்சை	...	சாமந்தி

17. பலவகை வண்டிகள்

கால்நடை	ரயில்வண்டி	மோட்டார் பஸ்
தூரதேசம்	ஒற்றை மாடு	அபாயங்கள்
இரட்டை மாடு	ஜட்காவண்டி	பாரமான

மனிதர்கள் அருகில் உள்ள ஊருக்குப் போவதாய் இருந்தால், சிலர் கால்நடையாகச் செல்வார்கள். ஆனால் தூர தேசங்களுக்குக் கால் நடையாகச் செல்வது கஷ்டம்; போய்ச் சேருவதற்கும் பல நாட்கள் செல்லும். ஆகவே தூரதேசம் போகிறவர்கள் வண்டியில் பிரயாணம் செய்வது நல்லது.

வண்டிகளில் பலவகை உண்டு. இதோ காண்பது ஒரு இரட்டை மாட்டு வண்டி. இதில் ஏழெட்டு மனிதர்கள் ஏறிக்கொள்ளலாம். பாரமான மூட்டைகளையும் இந்த வண்டியில் ஏற்றலாம். ரயில் வண்டி இல்லாத இடங்களில் பிரயாணம் செய்பவர்களுக்கு இது உபயோகமாகும்.



இது ஒரு ஒற்றைமாட்டு வண்டி. இதில் நான்கு பேர்களே ஏறிக்கொள்ளலாம். பட்டணங்களில் இம்மாதிரியான வண்டிகள் பல இருக்கின்றன. கிராமங்களிலும் இவ்வண்டிகள் சில உண்டு.



இப்படத்தில் தெரிவது ஒரு குதிரை வண்டி. இதை 'ஜட்கா' வண்டி என்றும் சொல்வது உண்டு. ஜட்கா வண்டி வேகமாய்ப் போகும். இவ்வண்டிகள் நகரங்களில் அதிகம். இதிலும் நான்கு மனிதர்கள் தான் ஏறலாம்.



இப்போது பல இடங்களில் 'மோட்டார் பஸ்' ஓடுவதை நாம் பார்க்கிறோம். அது மற்ற எல்லா வண்டிகளையும் விடச் சீக்கிரம் செல்லக் கூடியது ; ஆனால் அதை அதிக வேகமாக ஓட்டுவதால் சில வேளைகளில் அபாயங்கள் உண்டாகின்றன. மாட்டு வண்டி குதிரை வண்டிகளில் பிரயாணம் செய்வதில் அதிக அபாயம் உண்டாவது இல்லை.



இவை தவிர, பிரயாணம் செய்வதற்கு இன்னும் வேறு பல விதமான வண்டிகள் இருக்கின்றன.

கேள்விகள்

1. இரட்டை மாட்டு வண்டியால் என்ன உபயோகம் ?
2. நான்கு மனிதர்கள் ஏறக்கூடிய வண்டிகள் எவை ?

பயிற்சி

வேகமாய், மெதுவாய்—இச்சொற்களைப் பொருத்தமான இடத்தில் எழுது :

1. ஜட்காவண்டி —— போகும்.
2. மாட்டுவண்டி —— போகும்.
3. முயல்——போகும்.
4. ஆமை——போகும்.

18. கூடி வாழ்தல்

அண்ணன்	தனியாக	தீர்த்து
உறவினர்	தோழர்	ஏமாந்து
நேசமாய்	நஷ்டம்	மூடத்தனத்தை
அன்பாய்	பங்கிட்டு	வருந்தி

நீங்கள் உங்கள் அண்ணன் தம்பிகளிடத்திலும், மற்றும் உள்ள உறவினரிடத்திலும் நேசமாய் இருக்க வேண்டும்; வகுப்பில் படிக்கும் பிள்ளைகளிடத்திலும் அன்பாய் இருக்கவேண்டும். சிறிய எறும்புகளையும் காக்கை குருவிகளையும் பாருங்கள். அவைகள் எவ்வளவு நேசமாய் வாழ்கின்றன! காக்கை ஏதேனும் உணவைக் கண்டால் அது தனியாகத் தின்னாது. தன் தோழரோடு கூடியே தின்னும். காரணம் என்ன? நேசம் அன்றோ?

நீங்கள் எவரோடும் சண்டை செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் உங்களுக்கு நஷ்டம் தான் உண்டாகும்.

ஒரு நாள் இரண்டு பூனைகள் கடையிலிருந்து ஒரு வடையை எடுத்துச் சென்றன. அந்த வடையைப் பங்கிட்டுக்கொள்வதில் ஒன்றுக்கு ஒன்று சண்டை ஏற்பட்டது. அந்தச் சமயம் குரங்கு ஒன்று அவ் விடத்துக்கு வந்தது. பூனைகள் தங்கள் சண்டையைத் தீர்த்துக் கொடுக்கும்படி குரங்கைக் கேட்டுக்கொண்

டன. குரங்கு, இதுதான் சமயம் என்று அந்த வடையை வாங்கிக்கொண்டது; அதை ஒரு தராசில் வைத்து நிறுத்தது; எடை சரியாய் வரும் வரையில் அது வடையைக் கொஞ்சம் கொஞ்சமாய்த் தின்று வந்தது. கடைசியில் கொஞ்சம் மீதி இருந்தது. அதையும் தன் கூலிக்கு ஆயிற்று என்று குரங்கு தானே தின்றுவிட்டது. பூனைகள் ஏமாந்து தங்கள் மூடத்தனத்தை நினைத்து வருந்திச் சென்றன. இதனால், வீண் சண்டை கூடாது என்பது விளங்குகின்றது அல்லவா ?

கேள்விகள்

1. காக்கையின் குணம் என்ன ?
2. சண்டையிடுவதால் நஷ்டம்தான் உண்டாகும் என்பதற்கு ஒரு கதை சொல்லு.

பெரிய தகப்பனார், அக்காள், சிறிய தகப்பனார், மாமன், தம்பி, தங்கை, அண்ணன்—இவைகளில், தகுந்த சொல்லைக் கோடிட்ட இடங்களில் எழுது :

பயிற்சி

1. எனக்கு முன் பிறந்தவன் ——.
2. எனக்குப் பின் பிறந்தவன் ——.
3. எனக்கு முன் பிறந்தவள் ——.
4. எனக்குப் பின் பிறந்தவள் ——.
5. என் தாயுடன் பிறந்தவர் ——.
6. என் தந்தைக்கு முன் பிறந்தவர் ——.
7. என் தந்தைக்குப் பின் பிறந்தவர் ——.

19. வைத்தியசாலை

வருந்துகிறோம்	நடமாடுவது	பத்தியம்
தொற்று வியாதி	அசுத்தம்	சிகிச்சை
கிராமங்கள்	ஆற்றுவார்கள்	பட்டணங்கள்

சில சமயங்களில் நாம் நோயால் வருந்துகிறோம். நோய் வருவதற்குக் காரணம் பல இருக்கின்றன. நோயாளிகளிட மிருந்து சில நோய்கள் நம்மிடம் தொற்றிக்கொள்ளும். அவைகளுக்குத் தொற்று வியாதிகள் என்று பெயர். சொறி, சிரங்கு, கண்வலி முதலியவை தொற்று வியாதிகள்.

பனியிலும் ஜலத்திலும் நடமாடுவதால், ஜலதோஷம் ஜுரம் முதலிய வியாதிகள் உண்டாகும்.

அசுத்த நீரைக் குடிப்பதாலும், அசுத்த உணவை உண்பதாலும், பேதி முதலிய நோய்கள் உண்டாகக் கூடும்.

வியாதிகளைப் போக்க மருந்துகள் உண்டு. வைத்தியர்கள் நோயாளியின் உடம்பைப் பார்த்து, இன்ன வியாதி என்று தெரிந்துகொள்வார்கள்; பிறகு தக்க மருந்துகளைக் கொடுத்துப் பத்தியமும் சொல்வார்கள். வைத்தியர்கள் சொற்படி நோயாளிகள் நடந்துவர வேண்டும்; அப்பொழுதுதான் அவர்களுக்குச் சீக்கிரத்தில் வியாதி நீங்கும்.

பெரிய கிராமங்களிலும் பட்டணங்களிலும் தரும வைத்திய சாலைகள் இருக்கின்றன. அங்கே நோயாளிகளுக்கு இனமாக மருந்து கொடுத்துச் சிகிச்சை செய்கிறார்கள். இரண வைத்தியர்கள் கட்டிகளைக் கீறி ஆற்றுவார்கள். வைத்தியர்கள் நோயாளிகளிடம் அன்பு உள்ளவர்களாக இருப்பார்கள்.

கேள்விகள்

1. தொற்று வியாதிகள் எவை?
2. படத்தில் உள்ள ஒவ்வொருவரும் என்ன செய்கிறார்கள்?

பயிற்சி

கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை எழுது:—

மாதிரி:—நோயைத் தீர்ப்பவர் டாக்டர்.

1. பாடங்களைக் கற்பிக்கிறவர் ——.
2. பள்ளிக்கூடங்களைப் பரிக்ஷிக்கிறவர் ——

20. சுத்தம்

படுக்கை	துர்க்கந்தம்	ஊண்	அருந்துதல்
துலக்கு	ஸ்நானம்	நித்தம்	பள்ளி

['புள்ளிக் கலாப மயில் வாகன்' என்ற மெட்டு]

1. காலையில் படுக்கைவிட் டெழுந்து—உடன்
கடவுளைத் துதிசெய்து மகிழ்ந்து—பின்
கால்கை களைச் சுத்தம் செய்து
பால்போ லவே பல்துலக்கு வீரே—தினம் நீரே.

2. சோறிசி ரங்கு வந்துவிட்ட தானல்—மிக்க
துர்க்கந்தம் வீசுங் கிட்டப் போனல்
ஆகை யினல் ஸ்நானம் செய்து
தேகம்சுத்த மாகவைத்துக் கோள்வீர்—வைத்துக்
கோள்வீர்.

3. உடைகளை நன்ருய்த் துவைத் தெடுத்துத்—தினம்
உலர்த்திப்பின் அவைகளை உடுத்து—நல்ல
சுத்த மான ஊணும் நீரும்
நித்தமும் அருந்துதலே என்றும்—மிக நன்ரும்.

4. மாலைதன்னிற் பள்ளிவிட்டு வந்து—பின்
மகிழ்ந்து நண்ப ருடனே சேர்ந்து
பல விதமாய் ஓடி விளை
யாடுவீரேல் தேகம்பலம் ஆகும்—நோய்கள்
போகும்.



21. பட்டாஸ் கடை

கலர் மத்தாப்பு	வெங்காய வேடி	அபாயகரம்
அதிர்ந்து விடும்	பட்டாஸ் கட்டு	பட்டபாடு

சோமு :—அப்பா! நாளைக்குத் தீபாவளி அல்லவா? அடுத்த வீட்டுக் கண்ணன் பட்டாஸ் கட்டுகளும் வாணங் களும் வாங்கியிருக்கிறன். எனக்கும் வாங்கித் தாருங்கள்.

தந்தை :—நான் இன்று மாலை கடைத் தெருவுக்குப் போவதாய் இருக்கிறேன். நீயும் வா; உனக்கு வேண் டியவைகளையும் வாங்கித் தருகிறேன்.

கமலம் :—எனக்கும் பட்டாஸ், மத்தாப்பூ எல்லாம் வாங்கித் தாருங்கள் அப்பா! என்னுடு கூடப் படிக் கும் ஸரோஜாவுக்கு அவள் தகப்பனுர் எத்தனை கட்டு களும் மத்தாப்புகளும் வாங்கிக் கொடுத்திருக்கிருர் தெரி யுமா?

தந்தை :—சரி; உனக்கும் வாங்கித் தருகிறேன். உனக்குப் பட்டாஸ் சுடத் தெரியுமோ?

கமலம் :—என்னப்பா அப்படிக் கேட்கிறீர்கள்? எத்தனை கட்டு இருந்தாலும் சுடுவேன்.

தந்தை :—(குழந்தைகளுடன் பட்டாஸ் கடைக்குப் போய்க் கடைக்காரனைப் பார்த்து) ஐயா! பட்டாஸ் ரூபாய்க்கு எத்தனை கட்டுகள்?

கடைக்காரர் :—இந்தப் பெரிய கட்டுகள் ரூபாய்க் குப் பன்னிரண்டு; இவை ரூபாய்க்குப் பதினுறு; இவை இருபது.

தந்தை :—பெரிய கட்டுப் பட்டாஸ்கள் இரண்டு ரூபாய்க்கும், கலர் மத்தாப்பு வாணங்கள் ஒரு ரூபாய்க் கும் கொடுங்கள்.

சோமு :—அப்பா! வெங்காய வெடிகள் வாங்கிக் கொடுங்கள். அந்த வெடியின் ஓசை எப்படி இருக்கும்! ஊரே அதிர்ந்துவிடும்.

தந்தை :—அப்பா! அப்பா! அது வேண்டாம். அது அபாயகரமானது. சென்ற தீபாவளியின்போது

எதிர்வீட்டுச் செட்டியார் மகன் இராமசாமி, இந்த வெங்காய வெடியை அடித்துப் பட்டபாடு தெரியாதா? அவன் பிழைத்ததே பெரிதாய்ப் போய்விட்டதே! வேண்டாம் அந்தச் சனியன்.

சோமு :—நான் அவனைப் போலவா செய்வேன்? அவன் ஒன்றும் தெரியாதவன். நான் வெகு ஜாக்கிரதையாகவே அடிப்பேன் அப்பா!

தந்தை :—உன் ஜாக்கிரதை எனக்குத் தெரியும்; வெங்காய வெடிகள் உனக்கு வேண்டாம். இப்போது வாங்கின பட்டாஸ் போதும். வீட்டுக்குப் போகலாம்; வாருங்கள்.

(எல்லோரும் வீடு செல்கின்றனர்.)

கேள்விகள்

1. கமலம் தன் தந்தையினிடம் என்ன சொன்னாள்?
2. சோமு வெங்காய வெடி வாங்கித் தரும்படி கேட்டபோது, அவன் தந்தை என்ன சொன்னார்?

பயிற்சி

பெரிய, சிறிய, வேண்டும், வேண்டாம், தெரிந்தவன், தெரியாதவன்—இவைகளைச் சரியான இடத்தில் எழுது:

மாதிரி:—இவை பெரிய கட்டுகள். அவை **சிறிய** கட்டுகள்.

எனக்கு வெங்காய வெடிகள் ——.
அப்பா! உனக்கு அவை ——.
நான் வெங்காய வெடி சுடத் ——.
சோமு ஒன்றும் ——.



22. பொங்கல் பண்டிகை

தை மாதம்	நண்பர்	போகிப் பண்டிகை
சங்கராந்தி	படைத்து	கொண்டாடுவார்கள்
குங்குமம்	மஞ்சள்	அலங்காரம்

பொங்கல் பண்டிகையைச் சங்கராந்திப் பண்டிகை என்றும் சொல்வார்கள். அது தை மாதம் முதல் தேதியில் வரும். அதற்கு முதல் நாள் போகிப் பண்டிகை. பொங்கல் பண்டிகை அன்று இந்துக்கள் தங்கள் வீடுகளைச் சுத்தமாக மெழுகுவார்கள்; கோலம் இட்டு அலங்காரம் செய்வார்கள். நல்ல வேளையில் புதிய மண் பாத்திரத்தில் பொங்கல் இட்டுக் கடவுளுக்குப் படைத்து உண்பார்கள். அன்றைத் தினம் வெற்றிலை,

பாக்கு, தேங்காய், வாழைப்பழம், கரும்பு முதலியவைகளை உறவினர்க்கும் நண்பர்களுக்கும் கொடுத்து மகிழ் வார்கள்.

சங்கராந்திக்கு மறுநாள் வருவது மாட்டுப் பொங்கல். அன்று மாடு கன்றுகளைக் குளிப்பாட்டுவார் கள். அவற்றிற்கு மஞ்சள் குங்குமம் இட்டு, மாலை சூட்டி அலங்காரம் செய்வார்கள். பிறகு, பொங்கல் இட்டு அவைகளைப் பூசிப்பார்கள். மாலையில் அம்மாடு கன்றுகளை அலங்காரத்துடனே ஊரைச் சுற்றி ஓட்டிக் கொண்டு வருவார்கள். இப்படி, இந்துக்கள் எல்லோரும் பொங்கல் பண்டிகையைச் சிறப்பாகக் கொண்டாடு வார்கள்.

கேள்விகள்

1. பொங்கல் பண்டிகைக்கு வேறு பெயர் என்ன?
2. போகிப் பண்டிகை எப்போது வரும்?
3. மாட்டுப் பொங்கல் அன்று என்ன செய்வார்கள்?

பயிற்சி

பின் வரும் பண்டிகைகள் எந்தெந்த மாதங்களில் வரும்:—

மாதிரி:—பொங்கல் பண்டிகை தை மாதம் வரும்.

தீபாவளிப் பண்டிகை ——— வரும்.

நவராத்திரி ——— வரும்.

பிள்ளையார் சதுர்த்தி ——— வரும்.

தமிழ் மாதங்களின் பெயரை வரிசையாய்ச் சொல்.



23. நாற்காலி ஆட்டம்

(முதற் பாகம்)

விநோதமாய்	வட்டமாக	ஐயம்	ஆர்மோனியம்
தயாராய்	வாத்தியம்	தலைவலி	தோற்றுப்போன

கோபாலன் :—சுந்தரம்! நேற்று நீ ஏன் பள்ளிக்கூடம் வரவில்லை ?

சுந்தரம் :—தலை வலியாய் இருந்தது; அதனால் வரக் கூடவில்லை. நேற்று ஏதேனும் பள்ளிக்கூடத்தில் விசேஷம் உண்டோ? சொல்.

கோபா.—உண்டு; நமது உபாத்தியாயர் நேற்றுப் புதிதான விளையாட்டு ஒன்று கற்றுக்கொடுத்தார். அது

நாற்காலி விளையாட்டாம்; வெகு வேடிக்கையாய் இருந்தது.

சு.—இதென்ன விநோதமாய் இருக்கிறதே! நாற்காலி விளையாட்டா? அது எப்படி விளையாடுவது?

கோ.—சொல்லுகிறேன் கேள். தரையில் வட்டமாகக் கோடு ஒன்று கிழிக்கவேண்டும்; அந்தக் கோட்டின் மேல் பிள்ளைகள் இடம்விட்டு நின்றுகொண்டு ஓடுவதற்குத் தயாராய் இருக்கவேண்டும். எத்தனை பிள்ளைகள் விளையாட வந்திருக்கிறார்களோ, அத்தனை நாற்காலிகளில் ஒன்று குறைவாக வட்டத்தின் நடுவில் போடப்பட்டிருக்க வேண்டும். பிள்ளைகள் விளையாடும்போது உபாத்தியாயர் ஆர்மோனியப் பெட்டியை வைத்துக்கொண்டு வாசித்து வருவார்.

சு.—விளையாட்டில் வாத்தியப் பெட்டி எதற்காக?

கோ.—வாத்தியம் வாசிக்கும்பொழுது பிள்ளைகள் வட்டத்தைச் சுற்றி ஓட ஆரம்பிக்கவேண்டும். அப்போது பிள்ளைகளுக்கு நாற்காலியின் மேலே கவனம் இருக்கவேண்டும். பாட்டை நிறுத்தினவுடனே ஒவ்வொரு பையனும் ஓடிப்போய் ஒவ்வொரு நாற்காலியில் உட்காரவேண்டும். அப்போது ஒரு பையன் மாத்திரம் உட்கார இடமில்லாமல் ஏமாந்து விடுவான். அவனே தோற்றுப்போன பையன். பிறகு அவன் அவ்விளையாடும் இடத்தை விட்டு வெளியில் போய் உட்காரவேண்டும். அதன்

பிறகு ஒருவன் மற்ருெரு நாற்காலியையும் எடுத்து விடுவான்.

சு.—இது மிக வேடிக்கையாய் இருக்கிறதே! பிறகு என்ன செய்யவேண்டும்?

கோ.—பிறகு இரண்டு பிள்ளைகளும் ஒரு நாற்காலியுமாக வரும் வரையில் இப்படியே விளையாடிவரவேண்டும். அதன் பிறகு, ஒருவன் ஓடி முன்ஞல் நாற் காலியில் உட்கார்ந்துகொள்வான். அவன்தான் இந்த விளையாட்டில் ஜயம் அடைந்தவன்.

சு.—ஆஹா! இது வெகு வேடிக்கையாய்த்தான் இருக்கி றது. அப்படியாஞல் நேற்று ஆட்டத்தில் நம் பள்ளிக்கூடத்தில் எவன் ஜயித்தான்?

கோ.—நான்தான் ஜயித்தேன். அச்சமயத்தில் எல்லா ரும் கைகொட்டிச் சந்தோஷப்பட்டார்கள்.

சு.—அப்படியா? சந்தோஷம்.

கேள்விகள்

1. நாற்காலி விளையாட்டுக்கு எத்தனை நாற்காலிகள் வேண்டும்?
2. அவ்விளையாட்டில் தோற்றுப்போனவனை எப்படி அறிவது?

பயிற்சி

புதிய, ஜயித்த, தோற்ற, பழைய—இச்சொற்களைச் சரியான இடத்தில் எழுது:

மாதிரி:—நான் தீபாவளி யன்று புதிய ஆடை உடுத்தேன்.

என்னுடைய ——— ஆடை கிழிந்து விட்டது.
விளையாட்டில் ——— பையன் வெளியில் போகவேண்டும்.
விளையாட்டில் ——— பையன் கெட்டிக்காரன்.

24. பூனையும் குருவியும்

குதித்தோடும்	மகிழ்ந்தாடும்	தின்னுவாய்
மரக்கிளை	பொல்லாத	சேரேன்
விளையாட	வருவாய்	கொன்று



குருவி ! குருவி !
குதித்தோடும் குருவி !
மரக்கிளையின் மீதே
மகிழ்ந்தாடும் குருவி !
விளையாட இங்கே
வருவாய் நீ குருவி !

பூனையே ! பூனையே !
பொல்லாத பூனையே !
என்னை நீ கொன்று
தின்னுவாய் பூனையே !
உன்னோடு சேரேன்
ஓடிப்போ பூனையே.





25. பாம்புகள்

பாம்பாட்டி	வாத்தியம்	கடைவாய்	துவாரம்
பிடாரன்	பிரியம்	நாகப்பாம்பு	மரணம்
மகடி	புற்றுக்கள்	ஏராளமாக	ஊர்ந்து

இந்தப் படத்தில் இருக்கிற மனிதன் யார்? அவன் ஒரு பாம்பாட்டி. அவனைப் பிடாரன் என்றும் சொல்வது உண்டு. அவன் கையில் வைத்திருப்பது மகடி என்னும் வாத்தியம். அவன் அதை ஊதுகிறான்.

அவனுக்கு எதிரில் இருக்கும் பெட்டியில் இரண்டு பாம்புகள் இருக்கின்றன. அவை நாகப் பாம்புகள். நாகப் பாம்புகளுக்குப் பாட்டில் பிரியம் அதிகம். அவை அப்பாட்டைக் கேட்டுக்கொண்டு இருக்கின்றன.

நாகப் பாம்புகள் புற்றுக்களில் வசிக்கும். அவை படம் எடுக்கும். அவைகள் அதிக விஷம் உள்ளவை.

மலைகள் உள்ள காடுகளில் பாம்புகள் ஏராளமாக வசிக்கின்றன. அவைகளில் சில மிகப் பெரியவை. அவை, எருது எருமை முதலிய பிராணிகளையும் கொல்லும். அவைகளுக்கு மலைப் பாம்புகள் என்று பெயர்.

சில பாம்புகளுக்குக் கடைவாய்ப் பற்களின் அடியில் விஷப்பை இருக்கிறது. பாம்பு ஒருவனைக் கடித்தால் அவ்விஷம், அதன் பற்களில் உள்ள துவாரத்தின் வழியாக அவன் இரத்தத்தில் கலக்கிறது. விஷம் தலைக்கு ஏறினல் அவன் மரணம் அடைவான்.

பாம்புகளுக்குக் காலும் இல்லை, கையும் இல்லை. அவை மார்பினல் ஊர்ந்து செல்லுகின்றன. பாம்புகள், தவளை எலி பூச்சி முதலியவற்றைத் தின்னும்.

கேள்விகள்

1. படத்தில் பாம்பாட்டி என்ன செய்கிறன் ?
2. பாம்பு கடித்தால் ஏன் மரணம் உண்டாகிறது ?
3. பாம்புகள் எவற்றைத் தின்னும் ?

பயிற்சி

பறந்து, குதித்து, தவழ்ந்து, ஊர்ந்து—இவைகளைக் கோடிட்ட இடங்களில் சரியானபடி பொருத்தி எழுது.

மாதிரி :—தவளைகள் குதித்துச் செல்கின்றன.

1. பறவைகள் —— செல்கின்றன.
2. பாம்புகள் —— செல்கின்றன.
3. குழந்தைகள் —— செல்கின்றன.

26. கடற்கரை

சென்னைமா நகர்	தொப்பி	உருது
கடற்கரை	நகைகள்	தெலுங்கு
கூட்டம் கூட்டமாய்	இங்கிலீஷ்	மலையாளம்
வெள்ளைக்காரர்	குல்லாய்	கன்னடம்
முகம்மதியர்	மகாராஷ்டிரம்	அஸ்தமிக்கும்

இது சென்னைமா நகரின் கடற்கரை. நமது தேசத்துக் கடற்கரைகளில் இதுவே மிகவும் அழகானது. மாலை நேரத்தில் ஜனங்கள் இங்கே வந்து உலாவுவார்கள். சிலர் கூட்டம் கூட்டமாய் உட்கார்ந்திருப்பார்கள். ஜலத்தின் ஓரமாய்ச் சிலர் நடந்து போவார்கள். இங்கு வீசும் காற்று குளிர்ச்சியாய் இருக்கும்.

அதோ மேடையில் உட்கார்ந்திருப்பவர் வெள்ளைக்காரர். அவர், தமது மனைவி மக்களுடன் அங்கே இருக்கிறார். அவர் மனைவி, தன் தலையில் ஒரு தொப்பி வைத்திருக்கிறாள். அவர்கள் உடை வெகு சுத்தமாய் இருக்கும். வெள்ளைக்காரப் பெண்கள் அதிக நகைகள் அணிவது இல்லை. அவர்கள் தங்கள் குழந்தைகளை மணலில் விளையாட விட்டிருக்கிறார்கள். அவர்கள் பேசும் பாஷை இங்கிலீஷ்.

சிலர் குல்லாய் போட்டுக்கொண்டு மணலில் உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்கள் யார் தெரியுமா? அவர்கள் முகம்மதியர்கள்; அவர்கள் பெரிய வியாபாரிகள். அவர்கள் பேசும் பாஷை உருது.

இவர்கள் தவிர, இன்னும் சில ஜனங்கள் கூட்டமாக அங்கே உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாரும் இந்துக்கள். அவர்களுள் அனேகமாக எல்லாரும் பேசுவது தமிழ். சிலர் தெலுங்கும், சிலர் மலையாளமும், சிலர் கன்னடமும், சிலர் மகாராஷ்டிரமும் பேசுகின்றனர். அவர்கள் எல்லோரும் சூரியன் அஸ்தமிக்கும் வரையில், நல்ல காற்றுக்காக அங்கே தங்கியிருப்பார்கள். பிறகு தங்கள் தங்கள் வீடுகளுக்குச் செல்வார்கள்.

கேள்விகள்

1. கடற்கரையில் ஜனங்கள் மாலை நேரத்தில் என்னென்ன செய்வார்கள்?
2. படத்தில் தொப்பி வைத்துக்கொண் டிருப்பவள் யார்?

3. அவள் பேசும் பாஷை என்ன ?
4. உருது பாஷை பேசுகிறவர் யார் ?
5. இந்துக்கள் பேசும் பாஷைகளில் சில சொல்லு.

பயிற்சி

கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை எழுது :—

1. நான் பேசும் பாஷை தமிழ்.
2. வெள்ளைக்காரர் பேசுவது ———.
3. முகம்மதியர் பேசுவது ———.

27. கடவுள்

எண்ணம் பிரகலாதன் இரணியன் பொல்லாதவன் அருளால் உருட்டினன் ஊட்டினன் கைவிடமாட்டார்

கடவுள் எங்கும் இருக்கிறார். அவருக்கு நம்மிடம் மிகுந்த அன்பு உண்டு. நமக்கு வேண்டிய எல்லா வற்றையும் அவர் கொடுக்கிறார். நமது எண்ணங்களும், பேச்சுக்களும், காரியங்களும் அவருக்கு நன்றாய்த் தெரியும். கடவுளை நம்பினவர்களுக்கு எப்பொழுதும் நன்மை உண்டு. நமக்கு உண்டாகும் தீமைகள் எல் லாம் அவர் அருளால் நீங்கும்.

பிரகலாதன் என்று ஒரு சிறுவன் இருந்தான். அவன் கடவுளிடத்தில் மிகுந்த பக்தி உள்ளவன் ; கடவுளையே நம்பினவன். அவன் தந்தை மிகவும்

பொல்லாதவன். அவனுக்கு இரணியன் என்று பெயர். அவன், தானே கடவுள் என்று சொல்லிக்கொண்டான். அதைப் பிரகலாதன் ஒப்புக்கொள்ளவில்லை. அதனல் இரணியன் தன் பிள்ளைக்கு எவ்வளவோ துன்பங்கள் செய்தான். உணவில் விஷம் கலந்து ஊட்டினன்; மலையிலிருந்து கீழே உருட்டினன்; கடலில் தள்ளினன். அவன் ஒன்ருலும் இறக்கவில்லை. என்? கடவுளை அவன் நம்பினதால், அவர் அவனைக் காத்து வந்தார். பிறகு அவன் மேன்மை அடைந்தான்.

ஆதலால், நாம் கடவுளிடம் பக்திகொண்டு அவரையே நம்பி வரவேண்டும். அவ்வாறு நம்பி வந்தால், அவர் ஒரு நாளும் நம்மைக் கைவிடமாட்டார்.

கேள்விகள்

1. இரணியன் பிரகலாதனுக்கு என்னென்ன தீமைகள் செய்தான்?
2. அவை ஒன்ருலும் அவன் இறக்காமல் இருந்ததற்குக் காரணம் என்ன?

பயிற்சி

மலையிலிருந்து, துன்பங்கள், ஊட்டினன், தள்ளினன்: இவைகளில் சரியான பதத்தைக் **கோடிட்ட இடங்களில்** எழுது:

1. இரணியன் தன் பிள்ளைக்கு வெகு —— செய்தான்.
2. உணவில் விஷம் கலந்து ——.
3. —— கீழே உருட்டினன்.
4. கடலில் ——.



28. குயில் பாட்டு

1. சோலை மரக் குயிலே
   சோதி வரிக் குயிலே
   நீல நிறக் குயிலே—இங்கு
   நேராக வந்தி டுவாய்.

2. பாடும் இளங் குயிலே
   பழகும் துளிர்க் குயிலே
   ஆடும் பொழில் குயிலே—எங்கள்
   அருகிலே வந்தி டுவாய்

3. கீதம் பயில் குயிலே
   கிளையிற் கருங் குயிலே
   நாதம் அருள் குயிலே—இங்கு
   நாடியே வந்தி டுவாய்.

29. திருப்பதி மலை

செங்குத்து	காணிக்கை	மேலைத் திருப்பதி
அடிவாரம்	ஸ்ரீநிவாஸன்	புண்ணிய ஸ்தலம்
படிக்கட்டு	சித்தூர் ஜில்லா	வேங்கடாசலபதி
ஏராளமாக	கீழைத் திருப்பதி	திருவேங்கட முடையான்



திருப்பதி என்பது சித்தூர் ஜில்லாவில் உள்ள ஒரு சிறு பட்டணம். அது ஒரு புண்ணிய ஸ்தலம். திருப்பதியில் ஏழு மலைகள் இருக்கின்றன. மலை அடிவாரத்தில் ஓர் ஊர் இருக்கிறது. அது கீழைத் திருப்பதி என்று சொல்லப்படும். மலையின்மேல் உள்ள ஊர் மேலைத் திருப்பதி யாகும்.

மலையின்மேல் ஏறுவதற்குப் படிக்கட்டுகள் இருக்கின்றன. முதலில் கொஞ்சதூரம் வரையில் உள்ள படிக்கட்டுகள் செங்குத்தானவை. அவைகளின் மேல் ஏறிப் போவது மிகவும் கஷ்டம். படிக்கட்டுகளில் ஏறிப் போக முடியாதவர், தொட்டிலில் ஏறிச் செல்வார்கள். அத்தொட்டிலில் ஒருவர் அல்லது இருவர்

உட்காரலாம். அதை இரண்டு பேர் தூக்கிக்கொண்டு போவார்கள். போகும்போது பிரயாணிகள் 'கோவிந்தா! கோவிந்தா!' என்று கூவிக்கொண்டே போவார்கள்.

சிறிது தூரத்திற்கு அப்பால் படிக்கட்டுகள் அவ்வளவு செங்குத்தாக இருக்கமாட்டா. அவைகளில் ஏறிச்செல்வதில் அதிக கஷ்டம் இல்லை. சிற்சில இடங்



களில் மலையிலிருந்து கீழே இறங்கவும், பிறகு மேலே ஏறவும் வேண்டும். இவ்விதம் ஆறு ஏழு மைல் நடந்தால் மேலைத் திருப்பதியை அடையலாம்.

மேலைத் திருப்பதியில் ஓர் அழகான கோயில் இருக்கிறது. அக்கோயிலில் உள்ள சுவாமியின் பெயர் ஸ்ரீநிவாஸன். அவரைத் திருவேங்கட முடையான் என்றும்,

வேங்கடாசலபதி என்றும், ஏழுமலையான் என்றும் சொல்வார்கள். சுவாமியைத் தரிசிக்க, ஜனங்கள் பல இடங்களிலிருந்து அங்கு ஏராளமாகத் தினந்தோறும் வந்துகொண்டு இருப்பார்கள். எல்லோரும் சுவாமிக்குக் காணிக்கைகள் செலுத்துவார்கள். சிலர் கோயிலைச் சுற்றிப் பலதரம் புரண்டு வருவார்கள். திருப்பதியில் எந்நாளும் கூட்டம் அதிகமாகவே இருக்கும்.

கேள்விகள்

1. திருப்பதி என்னும் ஊர் எங்கே இருக்கிறது ?
2. சில படிக்கட்டுகளில் ஏறுவதற்குக் கஷ்டம் உண்டாவது ஏன் ?
3. படிக்கட்டுகளில் ஏறிச் செல்ல முடியாதவர் என்ன செய்வார்கள் ?
4. மேலைத் திருப்பதியில் உள்ள சுவாமியின் பெயர்கள் எவை ?
5. கோயிலுக்கு வந்த ஜனங்கள் என்னென்ன செய்வார்கள் ?

பயிற்சி

இவைகளுக்கு எதிரிடையான சொற்கள் எழுது :—

மாதிரி :—சிறிய	×	பெரிய
அடி	×	——
ஏறு	×	——
சில	×	——

மாதிரிக் கேள்விகளும் அவற்றின் விடைகளும்

1-ம் படம். 1. தெருவின் கோடியில் வருகிறவன் யார்? ஸைகிள்காரன். 2. ஒரு சிறுவன் தெருவில் என்ன செய்துகொண்டிருக்கிறான்? யானை வண்டியை இழுத்துக்கொண் டிருக்கிறான்.

அடுத்த பக்கத்திலுள்ள ஒவ்வொரு படத்தையும் பார்த்துக் கேள்விகளுக்குப் பதில் சொல்.

2-ம் படம். 1. ஸைகிள்காரன் எவ்விதம் வந்துகொண் டிருக்கிறான்? 2. சிறுவன் எப்படிப் போய்க்கொண் டிருக்கிறான்?

3-ம் படம். 1. ஸைகிள் வண்டி தெருவில் கவிழ்ந்து கிடக்கக் காரணம் என்ன? 2. சிறுவன் ஏன் தரையில் விழுந்து அழுகிறான்?

4-ம் படம். 1. சட்டையும் தலைப்பாகையுமாக நிற்கிறவன் யார்? 2. அவன் யாரைப் பிடித்துக்கொண்டிருக்கிறான்? ஏன்? 3. படத்திலுள்ள மற்றவர்கள் யார்? 4. அவர்களில் ஒருவன் சிறுவனுக்கு என்ன செய்துகொண் டிருக்கிறான்?

ஐந்தாம் படத்தில் நீ என்ன பார்க்கிறாய்?

6-ம் படம். டாக்டர் சிறுவனுக்கு என்ன செய்கிறார்?

படங்களைப் பார்த்துக் கதையைச் சொல்.

படங்களைப் பார்த்து ஒவ்வொரு கதைக்கும் பெயர் கொடு.



முன்பக்கத்தில் காணப்படும் படத்தில் உள்ள ஒவ்வொரு கதைக்கும் என்ன **பெயர்** கொடுக்கலாம்?

மாதிரிப் பயிற்சி

1-ம் படம். பாலத்தின் மேல் நாய் நிற்கிறது; பாலத்தின் கீழ்த் தண்ணீர் ஓடுகிறது; நாய், தன் வாயில் எலும்புத் துண்டைக் கடித்துக்கொண்டிருக்கிறது; நாய் நீரில் தன் நிழலைப் பார்க்கிறது. இக்கதைக்கு **நாயும் நிழலும்** அல்லது **பேராசையுள்ள நாய்** என்று பெயர் கொடுக்கலாம்.

6-ம் படம். தொட்டிலில் குழந்தை தூங்கிக்கொண்டிருக்கிறது; வீட்டில் கீரி வளர்ந்து வருகிறது; ஒரு பாம்பு குழந்தையைக் கடிக்க வருகிறது; கீரி அப்பாம்பைக் கொல்லுகிறது. இக்கதைக்கு, **கீரி குழந்தையைக் காப்பாற்றின கதை** அல்லது **கீரியும் பாம்பும்** என்று பெயர் கொடுக்கலாம்.

[இப்படியே உபாத்தியாயர் ஒவ்வொரு படத்தில் உள்ள கதையையும் விவரிக்கச் சொல்லி, பிள்ளைகளைக் கொண்டு ஒவ்வொரு கதையின் பெயரையும் சொல்லச் செய்யவேண்டும்.]

பழமொழிகள்

1. ஆசைக்கு அளவு இல்லை.
2. உண்மை வெல்லும்; பொய் கொல்லும்.
3. எறும்பு ஊரக் கல்லும் தேயும்.
4. கோபம் பாவம்.
5. நற்குணமே நல்ல செல்வம்.
6. புத்திமான் பலவான்.



30. நாற்காலி ஆட்டம்

(இரண்டாம் பாகம்)

மணி ஓசை	கற்பித்த	வாத்தியப் பெட்டி
வேண்டுமானால்	வேடிக்கை	வட்டம்

சுந்தரம்.—நாற்காலி விளையாட்டை நமது தெருவில் விளையாட முடியாதா?

கோபாலன்.—ஏன்? முடியாமல் என்ன?

சு.—எப்படி? அதற்கு நாற்காலிகளும், வாத்தியப் பெட்டியும் வேண்டுமே.

கோ.—வேண்டாம்; உபாத்தியாயர் அதற்கு ஒரு வழி சொல்லிக் கொடுத்திருக்கிறார். அதாவது: நாற்காலிகளுக்குப் பதிலாகக் காலினால் வட்டங்களைத் தரை

யில் கீறி வைக்கவேண்டும். வாத்தியப் பெட்டிக்குப் பதிலாக ஒரு பையன் மணி ஒன்று வைத்திருக்க வேண்டும். மற்றவை யெல்லாம் முன் சொன்னது போலவே செய்துவர வேண்டும். ஒன்று, இரண்டு, மூன்று என்று சொன்னவுடனே அவர்கள் ஓட வேண்டும். மணி ஓசை கேட்டவுடன் அவர்கள் வட்டத்தில் ஓடிப் போய் உட்காரவேண்டும். இவ்வளவுதான். வேண்டுமானுல் நாம் அதை இன்று நமது தெருவில் விளையாடலாம்.

சு.—உபாத்தியாயர் கற்பித்த விளையாட்டு வெகு நன்ருய் இருக்கிறது. இதுவும் வேடிக்கையாக இருக்கும் என்று தோன்றுகிறது. இன்று நாம் தெருவிலும் இதை விளையாடலாமே.

கோ.—சரி; இன்று நாம் அப்படியே விளையாடுவோம்.

கேள்விகள்

1. இந்த விளையாட்டில் நாற்காலிகளுக்குப் பதிலாக எவற்றை உபயோகிக்கலாம் ?
2. மணியின் உபயோகம் என்ன ?

பயிற்சி

கோடிட்ட இடங்களில் சரியான சொற்களை எழுது :—

1. உபாத்தியாயர் —— விளையாட்டு வெகு —— இருக்கிறது.
2. இதுவும் —— இருக்கும் என்று ——.

உலக நீதி

1. ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்.
2. ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.
3. மாதாவை ஒரு நாளும் மறக்க வேண்டாம்.
4. போகாத இடந்தனிலே போகவேண்டாம்.
5. நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.
6. அஞ்சாமல் தனிவழியே போகவேண்டாம்.
7. அடுத்தவரை ஒரு நாளும் கெடுக்கவேண்டாம்.
8. தனந்தேடி உண்ணுமல் புதைக்கவேண்டாம்.
9. தருமத்தை ஒரு நாளும் மறக்க வேண்டாம்.
10. கற்றவரை ஒரு நாளும் பழிக்க வேண்டாம்.
11. கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்.
12. மூத்தோர் சொல் வார்த்தைதனை மறக்க வேண்டாம்.
13. முன் கோபக்காரரோடு இணங்க வேண்டாம்.
14. சேராத இடந்தனிலே சேர வேண்டாம்.
15. செய்த நன்றி ஒரு நாளும் மறக்க வேண்டாம்.
16. உற்றுரை உதாசினங்கள் சொல்ல வேண்டாம்.
17. காணுத வார்த்தையைக் கட்டுரைக்க வேண்டாம்.
18. புண்படவே வார்த்தைகளைச் சொல்லவேண்டாம்.
19. இறந்தாலும் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்.
20. தெய்வத்தை ஒரு நாளும் மறக்க வேண்டாம்.

எமது புதிய புத்தகங்கள்

புது முறைத் தமிழ்

முதற் பாடம்	0—3—6
இரண்டாம் பாடம்	0—3—6
மூன்றும் பாடம்	0—4—6
நான்காம் பாடம்	0—5—6
ஐந்தாம் பாடம்	0—6—0

காமாக்ஷி புத்தகசாலை

மாயவரம்.